**சார்பு நீதிமன்றம், பண்ருட்டி.**

**முன்னிலை - செல்வி.கே.மும்தாஜ், பி.ஏ., எம்.எல்.,**

**சார்பு நீதிபதி, பண்ருட்டி.**

**2024 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16 ஆம் நாள் திங்கட்கிழமை**

**E.P.No. 147/2020**

**in**

**MCOP.No. 2/2000**

மாணிக்கம் ... மனுதாரர்/மனுதாரர்

- எதிர் -

1. கோபாலகிருஷ்ணன்
2. நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட்,
   பாண்டிச்சேரி. ... எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 10.12.2024 அன்று இறுதியான விசாரணைக்கு வந்து, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.ராம்மோகன் அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.அசோகன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இம்மனுவில் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்...

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் **2**ம் எதிர்மனுதாரரின் அசையும் சொத்துக்களை பற்றுகை செய்து பகிரங்க ஏலத்தில் கொண்டு வந்து விற்று தீர்ப்பு தொகை வசூல் செய்து

கிடைக்கவேண்டும் என கேட்டு ஆர்டர் 21 ரூல் 43, 66 சிபிசி - யின் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரரால் தாக்கல் செய்த மனுவின் சுருக்கமான விவரங்கள்**:-

மனுதாரர் தரப்பில் தான் தீர்ப்பாணை பெற்றவர் என்றும், தனக்கு ஆதரவாக கடந்த 29.11.2004 ம் தேதி பண வடிவில் தீர்ப்பாணை ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளதென்றும், அது 2 ம் எதிர்மனுதாரரால் இதுவரை சமன் செய்யப்படவில்லை என்றும், எனவே மனுவில் குறிப்பிட்டுள்ள 2 ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியமான அசையும் சொத்துக்களை ஜப்தி செய்து பகிரங்க ஏலத்தில் கொண்டு வந்து விற்று தீர்ப்பாணை தொகை வசூல் செய்து கிடைக்க வேண்டும்.

**3) 2 ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்**:-

மனு விவரங்கள் உண்மையல்ல. மனுவில் கோரப்பட்டுள்ள வட்டி தவறு என்றும், நிறைவேற்று மனுவில் கோரப்பட்டுள்ள தொகை அதிகமானது என்றும், வழக்கறிஞர் கட்டணத்தில் கோரப்பட்டுள்ள தொகை அதிகமானது என்றும், மனுதாரர் தரப்பில் அளித்துள்ள அசையும் சொத்துக்களின் பட்டியல் தவறு என்றும், அசையும் சொத்துக்களுக்கு கொடுக்கப்பட்ட மதிப்பீடு சரியாக இல்லை என்றும், விபத்தில் சிக்கிய குறிப்பிட்ட வாகனத்தை மட்டுமே குறிப்பிட முடியும் என்றும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) தீர்வுக்குரிய பிரச்சனை**

இம்மனுவில் தீர்வு காணவேண்டிய பிரச்சனை யாதெனில் மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதா என்பதாகும்?

**5) தீர்வு**

மனுதாரர் தரப்பில் தனக்கு ஆதரவாக கடந்த 29.11.2004 ல் பண வடிவில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதென்றும், எனவே 2 ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனுச்சொத்துக்களை பற்றுகை செய்து பகிரங்க ஏலத்தில் கொண்டு வந்து விற்பனை செய்யப்படவேண்டுமென கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

6) 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுவில் கோரப்பட்டுள்ள வட்டி தவறு என்றும், நிறைவேற்று மனுவில் கோரப்பட்டுள்ள தொகை அதிகமானது என்றும், வழக்கறிஞர் கட்டணத்தில் கோரப்பட்டுள்ள தொகை அதிகமானது என்றும், மனுதாரர் தரப்பில் அளித்துள்ள அசையும் சொத்துக்களின் பட்டியல் தவறு என்றும், அசையும் சொத்துக்களுக்கு கொடுக்கப்பட்ட மதிப்பீடு சரியாக இல்லை என்றும், விபத்தில் சிக்கிய குறிப்பிட்ட வாகனத்தை மட்டுமே குறிப்பிட முடியும் என்றும், எனவே மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் வாதிடப்பட்டது.

7) வழக்கு கோப்பிலிருந்து மனுதாரருக்கு ஆதரவாக கடந்த 29.11.2004 ம் தேதி பணம் தொடர்பான தீர்ப்பாணை ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளதென்பது தெரியவருகிறது. அது இதுவரை சமன் செய்யப்படவில்லை என்பதும் தெரியவருகிறது. எதிருரையிலிருந்து மனுச் சொத்தானது 2 ம் எதிர்மனுதாரருக்கு உரிமைப்பட்டது என்பது தெரியவருகிறது. இந்நிலையில் மனுதாரரின் இந்த நிறைவேற்றுகை மனு மேற்கொண்டும் நடத்தப்படவேண்டியது கட்டாயமானதாகும்.

**முடிவாக, மனு அனுமதிக்கப்பட்டு மனுச்சொத்துக்களை பற்றுகை செய்ய உத்தரவிடப்படுகிறது. பற்றுகைக்கு வாய்தா 28.01.2025,**

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைத் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2024 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16 ம் நாளாகிய இன்று அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/- செல்வி.கே.மும்தாஜ், பி.ஏ., எம்.எல்.
சார்பு நீதிபதி,
பண்ருட்டி.

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** - இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** - இல்லை

ஒம்/- செல்வி.கே.மும்தாஜ், பி.ஏ., எம்.எல்.
சார்பு நீதிபதி,
பண்ருட்டி.

Draft/Fair Order (AFT)

E.P.No. 147/2020
in
MCOP.No. 2/2000

Dated: 16.12.2024